**பத்திரிக்கைக் குறிப்பு**

**இந்திய ரிசர்வ் வங்கி**
www.rbi.org.in
**e-mail:** helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

**டிசம்பர் 14, 2002**

## துயர்துடைப்புப் பத்திரங்களின் அடிப்படையில் மட்டுமே வங்கிக் கடன்

துயர் துடைப்புப் பத்திரங்களின் அடிப்படையில் வங்கிகள் கடன் வழங்க இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது என்னும் செய்தியைப் பத்திரிகைகளில் ஒரு பிரிவினர் வெளியிட்டுள்ளனர்.

இந்திய ரிசர்வ் வங்கியின் விளக்கப்படி இந்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி துயர்துடைப்புப் பத்திரங்களின் அடிப்படையில் மட்டுமே வங்கிகள் கடன் வழங்கலாம். இந்த வசதி அக்டோபர் 2002யில் அறிமுகப்படுத்தப் பட்ட 7 விழுக்காடு சேமிப்புப் பத்திரங்களுக்கு ஏற்புடையதன்று.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 1ஆம் நாள் வெளியிட்ட 7 விழுக்காடு சேமிப்புப் பத்திரங்கள், வங்கிகள், நிதி உதவி நிறுவனங்கள் வங்கியல்லாத நிதியுதவி நிறுவனங்கள் மூலம் கடன் பெற பிணையமாக வைக்கும் தகுதி இவற்றிற்கு இல்லை. 8 விழுக்காது துயர் துடைப்புப் பத்திரங்களுக்கு (2002) முதலீடுகளின் மீது உச்ச வரம்பு உண்டு. ஆனால் 7 விழுக்காடு சேமிப்புப் பத்திரங்களுக்கு அத்தகைய உயர் அளவு எல்லை இல்லை. இந்த இருவகையான பத்திரங்களின் மூலமாகப் பெறப்படும் வட்டித்தொகைக்கு வருமான வரி, சொத்து வரி விலக்கு உண்டு.

**அல்பனா கில்லாவாலா**
பொது மேலாளர்

**பத்திரிகை வெளியீடு-2002-2003/622**